
Koviloor Digital Library

திருமுருகாற்றுப்படை



விளக்க உரை

ஞா.மாணிக்கவாசகன்

Acc No 24196
315

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-5

நக்கீரர் அருளிய

திருமுருகாற்றுப்படை

(மூலம் - விளக்கவுரை, அரும்பொருளுரையுடன்)



"அருள் நெறித் தொண்டர்"
மேனா. அன்புமணி
மீனாட்சி இல்லம்,
25, நான்காம் வீதி, முத்துப்பட்டணம்,
காரைக்குடி-630 001.
கைபேசி: 9445436817

விளக்க உரை

ஞா. மாணிக்கவாசகன்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 24196



உமா பதிப்பகம்
18, (பழைய எண் 171), பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
போன் : 2521 5363

Koviloor Digital Library

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை
விளக்க உரை	:	ஞா. மாணிக்கவாசகன்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு - நவம்பர், 2008 இரண்டாம் பதிப்பு - டிசம்பர் - 2011
பதிப்புரிமை	:	© உமா பதிப்பகம்
தாள்	:	11.6 வெள்ளைத் தாள்
நூல் அளவு	:	12.5 x 18 செ.மீ.
எழுத்து	:	11 புள்ளிகள்
பக்கங்கள்	:	32
பைண்டிங்	:	சாதாரணக் கட்டு
விலை	:	ரூ. 10.00
ஒளி அச்சு	:	விக்னேஷ்வர் கிராபிக்ஸ் சென்னை - 600 005.
அச்சிட்டோர்	:	பரமேஸ்வரி கிராபிக்ஸ் சென்னை - 600 005.
நூல் வெளியீடு	:	உமா பதிப்பகம் சென்னை - 600 001.

Koviloor Digital Library

தமிழ்த் தேனடை திருமுருகாற்றுப் படை...

தமிழ்ப் புலவர் - நக்கீரர் கடைச்சங்க காலத்தவர். மதுரை கணக்காயர் மகன் நக்கீரன் என்று போற்றப்படும் இவர் - ''நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்று முக்கண் முதல்வனுடனேயே வாதிட்ட வாய்மையாளர். இவர் அருளிய திருமுருகாற்றுப் படை - தமிழ்த் தேனடை.

அகத்தில் 16-ம், புறத்தில் 3-ம் நற்றிணையில் 7-ம் குறுந் தொகையில் 8-ம் இவர் பாடல்களாக இருந்தாலும் இவரின், பத்துப் பாட்டில் - ஒன்றான திருமுருகாற்றுப்படை இதன் தெய்வமணம் கமழும் தன்மை கருதி பன்னிரு திருமுறைகளோடு தொகுக்கப்படும் பெருமை பெற்றுள்ளது.

ஆற்றுப்படை நூல், பாடிப் பரிசில் பெற்ற புலவன் தான் பெற்ற பரிசிலின் சிறப்பை, பரிசளித்தவர் பெருமையைப் போற்றிக் கூறி, தன்னைப் போலவே மற்ற புலவர்களும் பரிசில் பெற்று மகிழ ஆற்றுப்படுத்தும் - வழிப்படுத்தும் நூலாகும். ''சிறு பாணாற்றுப படை, பெரும்பாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை இந்த வகையைச் சேர்ந்த செந்தமிழ்ச் சித்திரங்கள்.

திருமுருகாற்றுப்படை - கந்தன் அருளைப் பெற - அவன் கோயில் கொண்டிருக்கும் அறுபடை வீடுகளையும் சென்று தரிசித்து, திருமுருகனுடைய பேரருளாகிய பெருஞ் செல்வப் பரிசைப் பெற படிப்பவர்கள் ஆற்றுப்படுத்தும் அழகிய செய்யுள் மாலை.

''முன்னிய முடிக்கும் திறலோன் முருகன்'' - என்பது நக்கீரர் வாக்கு. தமிழ்க் கடவுள் முருகன் தண்ணருல் பெற எண்ணியர் எண்ணியாங்கி எய்தி இன்புற்றிருக்க - திருமுருகாற்றுப்படை - தமிழர் வள வாழ்வை வழிப் படுத்துவதாக.

வணக்கம் - வாழ்க தமிழ்.

- ஞா. மாணிக்கவாசகன்

Koviloor Digital Library

பதிப்புரை

சங்க இலக்கியங்களும், சமய இலக்கியங்களும் தமிழ் மண்ணை வளப்படுத்தப் பாய்ந்தோடும் பேராற்றின் இருகரைகள்.

நூல்கள் படித்துச் சுவைக்க - பயன் கண்டு மகிழ, பண்டிதர் போற்றும் பலநூல்கள், அவை பக்தி இலக்கியங் களாயினும், பழந்தமிழ்க் காவியங்களாயினும், சாமானியரும் எளிதில் படித்துப் புரிந்து கொள்ளத் தக்கவனவாக இருக்க வேண்டியது அவசியம். அந்தப் பாட்டு இலக்கியங்கள் வீட்டு இலக்கியங்களாகி அனைவர் கரங்களிலும் உலா வர வேண்டும் என்பது உமா பதிப்பகத்தின் உயர்ந்த இலட்சியங்களுள் ஒன்று.

இதன் வெளிப்பாடுதான்

திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம், சரசுவதி அந்தாதி, ஆசாரக் கோவை, விவேகசிந்தாமணி, கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, அவ்வைக் குறள், மணிமேகலை நீதி நூல்கள் - ஆகிய இலக்கியங்களின் தெளிவுரை விளக்க உரை வெளியீடுகள்.

கவிஞர் கோ. ஞா. மாணிக்கவாசகன் அவர்கள் இனிய தமிழில், எளிய நடையில் எழுதிய தெளிவுரை, விளக்க உரை தமிழன்பர்களின் சிறப்பான வரவேற்பையும், பாராட்டையும் பெற்ற பெருமைக்குரியது. தமிழ் கூறும் நல்லுலகம் எங்களின் இந்தப் பணிக்குத் தரும் ஆதரவு போற்றி வணங்குதற்குரியது.

எங்கள் பணி தொடர உங்களின் பேராதரவு துணை நிற்க வேண்டுகிறோம்.

இராம லட்சுமணன்
உமா பதிப்பகம்

Koviloor Digital Library

3/5

ஓம்

முருகா சரணம்

திருமுருகாற்றுப்படை

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டாங்கு
ஓஅற இமைக்கும் சேண் விளக்கு அவிரொளி
உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை

மறுவில் கற்பில் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணுறுங் கானத்து
இருள் படப் பொதுளிய பராரை மராஅத்து

உருள்பூந் தண்தார் புரளு மார்பினன்
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பில் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்

பல்காசு நிரைந்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்
சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு
பைந்தாள் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்துத்

Koviloor Digital Library

துவர முடித்த துகளஅறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்(டு)
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக் கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காள்
நறுங் குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதினர் கடுப்பக் கோங்கின்
குவி முகிழ் இளைமுலைக் கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தாதப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழீ ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்

சூர் அரமகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியாமரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்பூங் காந்தள்
பெருந் தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார் முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்

சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல் விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல் கண் கூகையோடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்று அடு விறற்களம் பாடித் தோள் பெயரா

Koviloor Digital Library

நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையில் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ் இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து

எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண் உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர் அருவாயில்
திருவீற்று இருந்த தீதுதிர் நியமத்து

மாடம் மலி மருங்கில் கூடல் குடவயின்
இரும் சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள் கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்

அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்; அதா அன்று;

2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடு ஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்

கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய

Koviloor Digital Library

முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப

நகை தாழ்பு துயல்வரூஉம் வகைஅமை பொலம் குழை
சேண் விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவு இல் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன் நேர்பு எழுதரு வாள்நிற முகனே

மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத் தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம் உறநாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மே, ஒருமுகம்
செறுநர்த்தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே ஆங்குஅம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர்விடுபு

வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்ந்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை, உக்கம் சேர்த்தியது ஒருகை,
நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசை இயது ஒருகை,
அங்குசம் கடவா ஒருகை, இருகை


ஐயிரு வட்டமொடு எஃகு வலம் திரிப்ப, ஒருகை
மார்பொடு விளங்க, ஒருகை
தாரொடு பொலிய, ஒருகை

Koviloor Digital Library

கீழ்வீழ் தொடியொடு மீமிசை கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட, ஒருகை
நீல்நற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட, ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரம் தலைக்கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகல
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்கு உயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே, அதாஅன்று;

3. திரு ஆவினன் குடி என்னும் பழநி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன் கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழித்த உண்டியர் இகலொடு
செற்றம் நீங்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம் வரம்பு ஆகிய தலைமயர் காமமொடு
கடும் சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகை முகந்து அன்ன மாசுஇல் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவி நேர்பு வைத்த செய்வுஉறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயன்உடை நெஞ்சின்
மெல்மொழி மேவலர் இன்நரம்பு உளர



Koviloor Digital Library

நோய் இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர் இன்நகைப்

பருமம் தாங்கிய பணிந்து ஏந்து அல்குல்
மாசு இல் மகளிரொடு மறுஇன்றி விளங்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புஉடை வால்எயிற்று
அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

புள் அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்

வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து
ஈர்இரண்டு ஏந்திய மருப்பன் எழில்நடைத்
தாழ்பெரும் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெரும் தெய்வத்தும் நல்நகர் நிலைஇய

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழபு மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவுஇல் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்

பகலில் தோன்றும் இகல் இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதனொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத்து அன்ன தோன்றலர் மீன் சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவனர் வளிஇடைத்

தீ எழுந்து அன்ன திறலினர் தீப்பட
வரும் இடித்து அன்னகுரலினர் விழுமிய

Koviloor Digital Library

உறுகுறை மருங்கில் தம் பெருமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்து உடன் காணத்
தாவுஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்
ஆவினன் குடி அசைதலும் உரியன்; அதாஅன்று,

4. திருவேரகம் என்னும் சுவாமிமலை

இருமூன்று எய்திய இல்பினின் வழா அது
இருவர் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டிஇளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடங்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரைஉறு நறுமலர் ஏந்திப் பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன் அதா அன்று;
பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்

5. குன்று தோறாடல்

அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன்
நறும் சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந் தொழில் வல்வில் கொலை இய கானவர்
நீடு அமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடில் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல் உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டு சுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்

Koviloor Digital Library

முடித்த குல்லை இலை உடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு
சுரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில் கண்டு அன்ன மடநடை மகளிரொடு

செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வ காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்

கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்பு ஆர்த்து அன்ன இன்குரல் தொகுயொடு
குறும்பொறிக் கொண்ட நறும்தண்சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்று தோறாடலும் நின்றதன் பண்பே; அதாஅன்று

6. பழமுதிர் சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூம் கடம்பும்

மன்றமும் பொதியிலும் கந்துஉடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடும் மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐது உரைத்துக்

Koviloor Digital Library

குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇச்

செந்நூல் யாத்து வெண்பொரி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிறப்பு இரீ இச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

பெரும் தண் கணவீர நறுந்தண் மாலை
துணை அற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன் இயம் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க
முருகு ஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலஉடன்

கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்நர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த ஆறே
யாண்டு யாண்டு ஆயினும் ஆகக் காண்தக

முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூப் பரவிக் கால் உற வணங்கி
நெடும் பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ

ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ

Koviloor Digital Library

இழை அணி சிறப்பில் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ

மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபில் பெரும்பெயர் முருக
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேர் ஆள

அலந்தோர்க்கும் அளிக்குமு பொலம்பூண் சேஎய்
மண்டு அமர் கடந்த நின் வென்றுஅடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி

போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின் அளந்து அறிதல் மண் உயிர்க்கு அருமையின்
நின் அடி உள்ளி வந்தனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய் எனக்

குறித்தது மொழியா அளவையில் குறித்துஉடன்
வேறுபல் உருவில் குறும்பல் கூளியர்
சாறு அயர களத்து வீறு பெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்து என

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி

Koviloor Digital Library

அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின் வரவு என
அன்பு உடை நின்மொழி அளைஇ விளிவு இன்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறல் அரகம் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில் சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூஉடை அலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர் இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாகக நறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துஉடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெறீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர் அளை செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண் நின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலை கிழவோனே.

சரணபவ ஓம் சண்முகா சரணம்

Koviloor Digital Library

திருமுருகாற்றுப்படை விளக்க உரை

1. திருப்பரங்குன்றம்

உலகம் மகிழ வலம்வர , பலரும் போற்றி வணங்குகிற கதிரவன் எழுகிறான். நீலக்கடல் மேலே காலை இளங்கதிர்ச் சோதியாய் சூரியன் உதிப்பது - கருநீல மயில்மீது செஞ்சுடர் போலும் திருமேனி உடைய முருகப் பெருமான்; அன்பர்கள் மனத்தின் அறியாமை இருளகற்ற, வல்லமை வாய்ந்த திருவடிகளோடும், பகைவரை அழிக்கும் இடிபோன்ற திருக்கரங்களோடும் அமர்ந்து வருவதுபோல உள்ளது என்கிறார் புலவர் பெருமான் நக்கீரர்.

(6-11) இப்படித் தோன்றுகிற முருகன் என்ன சாதாரண மானவனா? இல்லை! அவன் குறைவற்ற கற்புடைய - அழகிய நெற்றி உடைய தேவானை கணவன். கடல்நீரை நிறைய மொண்டுவரும் கருத்த மேகங்கள் பொழிந்த பலத்த மழையில் நனைந்து, தழைத்து வளர்ந்திருக்கும் காட்டில் - அடிபருத்த பெரிய கடம்ப மரத்தின் வட்டவடிவமான, மணம் வீசும் அழகிய மலர்களாலான மாலை சூடிய மார்பினன்.

(12-25) நீண்டுயர்ந்த மூங்கில்கள் நிறைந்த மலையில், அழகிய சதங்கைகள் அணிந்த சிறிய பாதங்களும், திரண்டு நீண்ட கால்களும், வளைந்த சிற்றிடையும், பெரிய தோள்களும் இந்திரகோபப் பூச்சியின் இயற்கையான நிறம் போல - அழகிய பல வண்ணம் அமைய அணிந்த புடவையும், மணிகள் கோத்த மேகலையும் உடைய கையால் செய்யப்படாத பொன்போலும் ஒளிவீசும். இயற்கை அழகுடைய தேவமகளிர் உடன் விளையாடும் தோழிப் பெண்கள் கூந்தலை வகிடெடுத்துச் சீவி அதில் வெட்சிப் பூ இதழும், குவளை நறுமலரும் சூட்டியதோடு சுறாமீன் வாய்போலும் உள்ள நெற்றிச் சுட்டியை அவர்கள்

Koviloor Digital Library

அழகிய நெற்றியில் அணிவித்தனர். தெய்வ உத்தி சீதேவி என்னும் பிற தலை அணிகளையும் பூட்டி அலங்கரித்தனர்

(26 - 46) வாரி முடித்த கூந்தல் கொண்டையிலே அவர்கள் பெரிய - குளிர்ச்சி தரும் செண்பகப் பூக்களைச் செருகி இருப்பர். அதோடு வெளிப்பக்கம் கருநீலமாகவும் உட்பக்கம் அழகாக வெள்ளை நிறத்தோடும் இருக்கும் மருதமலர்க் கொத்தையும் சூடியிருப்பர். கூடவே தண்ணீருக்குள்ளே இருந்து வெளியே தலைநீட்டிக் கிளை பரப்பிப் படர்ந்திருக்கும் செழுங்கழுநீர்ப் பூக்களின் சிவந்த அரும்புகளைச் சேர்த்துக் கட்டிய மாலையையும் கொண்டையைச் சுற்றிக் கட்டியிருப் பார்கள். அழகிய இரு காதுகளிலும் அசோக மலரின் அழகிய தளிர்களையும் சூட்டியிருப்பர். தங்க நகைகள் உடம்பில் அசைந்தாட வைரம் பாய்ந்த சந்தன மரத்தை உரைத்துச் சேர்த்த குழம்பை, மருதமலர் சூட்டிக் கொள்வது போல அவர்கள் மார்பெல்லாம் பூசிக் கொள்வர். வேங்கைப்பூ விரியும் போது உதிரும் மகரந்தப் பொடிகளைச் சந்தனக் குழம்போடு சேர்த்தும், விளா மரத்தின் சிறிய தளிர் இலைகளைக் கிள்ளி ஒருவர் மேல் ஒருவர் வீசி எறிந்தும் அந்தத் தேவமகளிர் விளையாடி மகிழ்வர். இப்படி அவர்கள் விளையாடும்போது; பகைவரை அழிக்கும், வீரம்மிக்க வேலவனுடைய சேவல் கொடி நீடுழி வாழ்க என்று அவர்கள் பாடி மகிழ்வது பக்க மலையெல்லாம் எதிரொலிக்கும். மலைகளிலேயே வாழுகிற குரங்குகள்கூட ஏறி அறியாத உயர்ந்த மரங்கள் உடைய அந்த மலைச் சாரலில், வண்டுகள் மொய்க்காத சிவந்த காந்தள் மலர்கள் நிறையப் பூத்திருக்கும். அந்தப் பூக்கள் பார்க்க நெருப்புச் சுடர்போல இருக்கும். அப்படிச் சிவந்த - அந்த காந்தள் மலர்களாலான பெரிய மாலையைத் தலைமாலையாக அணிந்தவன் முருகப்பெருமான். அவனுடைய கூரிய வடிவேல், பாறைகள் நிறைந்த பனிக்கடலைத் துளைத்தது. கறுப்பு முடியும், பிளந்த வாயும், பெரிய பற்களும், ஆந்தைக் கண்களும்,பெரிய வயிறும் உடைய பேய்க் கணங்களை அழித்துக் கொன்றது.

Koviloor Digital Library

(47 - 77) பேய்களின் தோற்றமே, அஞ்சத்தக்கதாக இருக்கும். அதுவும் அந்தப் பெண் பேய்கள் - அவற்றின் நடையும், கறுத்து உலர்ந்த தலைமுடியும், இரத்தம் தோய்ந்த கூரிய நகமுடைய விரல்களும், கண்களைத் தோண்டி, உண்டுவிட்டுத் தலைகளைக் கையிலே எடுத்துக்கொண்டு போர்க்களத்திலே அவைகள் ஆடுகிற பேய்க் கூத்தும் கண்டவரைக் கதி கலங்கச் செய்யும். இறந்த பிணங்களின் கொழுப்பைத் தின்றபடி அவை துணங்கைக் கூத்தாடும். அப்படிப்பட்ட போர்க்களத்திலே குதிரை முகமும், மனித உடலும் கொண்ட சூரன் பதுமன் ஆகிய இரு அரக்கர்களின் உடலும் வேறு வேறாக வேல் எறிந்து கொன்றவன் முருகன். இப்படி அரக்கர்கள் வலிமையை அழித்த செவ்வேள் முருகப் பெருமான் தான், பூங்கொத்துக்கள் தாழ மாமரமாய் நின்ற சூரனைக் கொன்று அளவில்லாத புகழையும் அருளையும் வழங்கிய இறைவனாவான். இப்படிப்பட்டவனுடைய திருவடிகளைப் பணிந்து, எவர்க்கும் நல்லதே செய்ய நினைத்து, உயர்ந்த ஞானத்தைப் பெற; ஐம்புலன் வழிச்செல்லும் பற்றை விட்டு, நல்வழியில் அறிவைச் செலுத்தி நீ வாழ விரும்புவாயானால் உனக்கு எல்லா நலன்களும் கிட்டும். கருதிய யாவும் கைகூடும்.

போருக்கு வாவென்று பகைவரை அழைப்பதுபோல, மதில்மேல் வானளாவப் பறக்கும் கொடிகளும், பந்தும் பந்தோடு பாவை உருவங்களும் தொங்கும், பகைவரை அழித்த அரண்மனை ஆசார வாசலும், வளம் கொழிக்கும் - இலக்குமி வீற்றிருக்கும் கடைத்தெருவும், மாடகூடங்களும் நிறைந்த மதுரை மாநகருக்கு மேற்கே உள்ளது திருப்பரங்குன்றம். சேறுகள் படிந்த வயலில், அங்கே பூந்தாது சிந்தும் தாமரைப் பூக்கள் இரவெல்லாம் கண்மூடித் தூங்கும். காலையில் நெய்தல் பூவிரிய உதிக்கும் சூரிய ஒளியில் அவை கண்மலரும். இப்படிப் பட்ட சுனைப் பூக்களிலே தேனுண்ண வண்டுகள் வந்து ஒலியெழுப்பும். தாமரைத் தேனுண்ண வண்டுகள் வருவது போல முருகன் திருவடித் தாமரை அருள் பெற நாடிவரும் அன்பர்

Koviloor Digital Library

மனம் மகிழத் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருப்பவன் திருமுருகன். அதுவுமல்லாமல்....

2. திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர்

(78 - 90) கூர்மையான நுனி உடைய, அங்குசம் அழுத்துவதால் உண்டான தழும்புகள் நிறைந்த யானையின் மத்தகத்தில் சூட்டப் பெற்றுள்ள நெற்றிப் பட்டத்துடன் வாடாத பொன்மாலை அசையவும், இருபக்கமும் கட்டித் தொங்க விடப்பட்ட மணிகள் ஒலி எழுப்பவும், எவரும் தடுத்து நிறுத்த முடியாத - யமனைப் போன்ற வலிவுடைய - காற்றைப் போல் விரைந்து செல்கின்ற யானை மீதமர்ந்து, மாலை மகுடம், பூண், பூ, அலங்காரம் என்னும் ஐந்தும் திருத்தமுற அமைந்திருக்கத் திருமுடிமீது சூடிய கிரீடத்தில் பதிந்துள்ள பலவகை இரத்தின மணிகள் மின்னல்போல் ஒளிவீசித் திகழவும்; காதிலே அணிந்த ஒளிவீசும் மகர குண்டலங்கள், நெடுந்தூரம் வரை சந்திரனைச் சுற்றியுள்ள நட்சத்திரங்கள் போல் மின்னவும்; தடையின்றித் தங்கள் தவவேள்வி முடிக்க நினைக்கும் பெரியோர்கள் உள்ளக் கோவிலில் இருந்து ஒளிவீசும் - அறுமுகன் திருமுகங்கள் ஓர் ஆறும்.

(91-100) உலகத் துன்பங்களை எல்லாம் போக்கி அருள் ஒளி வீசும் அவனுடைய ஒரு திருமுகம். இன்னொரு திருமுகம் அவனைப் போற்றி வழிபடும் அன்பர்களுக்கு அருள் வழங்கி அவர்கள் வேண்டும் வரம் அளிக்கும் திருமுகம். அவனுடைய இன்னொரு திருமுகம் மந்திர விதிகளின்படி அந்தணர் செய்யும் வேள்வியைக் காக்கும் கருணைமுகம். மற்றொரு திருமுகம் அறிஞர்கள் மனத்திருள் போக்கி அவர்களுக்கு மதிநலம் அளித்து நிலவொளி போல் சிந்தையை நேர்படச் செய்யும் திருமுகம். இன்னொரு திருமுகம் பகைவரை அழித்துப் பக்தருக்கு அருளும் பரசிவமுகம்.

(101 - 125) ஆறாவது திருமுகமோ கொடி போலும் இடை உடைய குறமகள் வள்ளியோடிருந்து மகிழும் அருள்

Koviloor Digital Library

முகம். இப்படி இந்த அழகிய ஆறு திருமுகங்களும் - ஒவ்வொரு முகமும் - அது அதற்குரிய செயலைச் செய்ய; பொன்மணி மாலை புரளும் அகன்று விரிந்த மார்பும், எதிரியின் மார்பைப் பிளக்கும் வலிமை உடைய, உத்தம ரேகைகள் ஓடும் முருகனின் பன்னிரு கைகளும், திண்தோளும்; பக்தர்களுக்கு அருள்பாலிக்க என்றே எடுத்தவை. முருகனின் ஒரு திருக்கரம் வானுறையும் முனிவர்க்கு அருள அபயம் அளிப்பது. இன்னொரு கரம் இடுப்பில் ஊன்றியது. ஒரு கரம் அங்குசம் எறிய இன்னொரு கரம் ஆடை சுற்றிய தொடைமேல் வைத்தபடி இருக்கும். இரு திருக்கரங்கள் கேடயமும் வேலாயுதமும் ஏந்தி நிற்கும். ஒருகரம் மார்பொடு பொருந்தி ஞான முத்திரை காட்ட, இன்னொரு கரம் மார்பில் புரளும் செப மாலையைப் பற்றியபடி இருக்கும். ஒரு கரம் கங்கணம் பற்றி மேலே சுழற்ற, இன்னொரு கரம் பூசை மணி ஒலிக்கும். ஒரு கரம் நீலநிற வானத்தில் இருந்து மழை பொழிய அருள, இன்னொரு கரம் தேவமகளிர்க்குத் திருமணம் செய்விக்கும். இப்படி அறுமுகப் பெருமானின் பன்னிரு கரங்களும் அவை அவைகளுக்கு உரிய கிரியைகளைச் செய்ய; வானத்தில் மங்கல வாத்தியங்கள் இசை எழுப்பும். வைரம் பாய்ந்த ஊதுகொம்புகள் ஒலி எழுப்பும். வெண்சங்குகள் முழங்கும். இடி ஓசைபோல் முரசு அதிரும். புள்ளிக் கலாபமயில் தோகை விரித்து, வெற்றிவேல் கொடி மீதிருந்து கூவும். இத்தகு சீர்மல்கு சீரலைவாய் என்னும் சிறப்புடைய செந்தில் பதிக்கு வான்மார்க்கமாக விரைந்து வந்து அடியவர்க்கு அருள் செய்தலும் அவனுக்கு இயலும். அல்லாமலும்;

3. திருஆவினன்குடி என்னும் பழநி

(126 - 147) மரஉரி உடையும், வெண்சங்கு போன்று வெளுத்த நரைமுடியும், அழுக்கற்ற ஒளி உடம்பும், மான்தோல் போர்த்த சதைப் பற்றே இல்லாத எலும்புக் கூடு போன்ற தோற்றமும், உணவின்றிப் பல பகல் பொழுதுகளைக் கழித்த - விருப்பு வெறுப்பற்ற - மனமும்; கற்றறிந்த பெரியோரும்

Koviloor Digital Library

கண்டுணர முடியாத ஞானமும், அவா, வெகுளி ஆகிய தீய பண்புகளை விட்டொழித்த ஞானத் தலைமையும் உடைய முனிவர்கள் முன் செல்லவும்; புகைபோலும் மெல்லிய - மாசற்ற தூய ஆடைஅணிந்து, புதுமலர் மாலை சூடிய மார்பினை உடைய கந்தருவர், தாளக்கட்டோடு பொருந்திய செவிக்கினிய நல் இசையை யாழ் நரம்பில் மீட்டிக் கொண்டுவர, நோயற்ற வச்சிர தேகமும், மாந்தளிர் போன்ற அழகிய மேனியும், தேமல் படர்ந்த மார்பும, ஒளிவீசும் மணிவடமும் உயர்ந்து தாழ்ந்த சிற்றிடையும் வாய்ந்த கந்தருவப் பெண்கள் கூடவே இன்னிசை பாடி வருவர்.

(147 - 150) துளையோடு கூடிய நச்சுப் பல்லுடைய பாம்பு கண்டவர் நடுங்கத் தீப்போல மூச்செறியும் - சீறும். இப்படிப்பட்ட கொடிய பாம்பும் பயந்து சாகப் பறந்து வந்து தாக்கும் - பலவரிச் சிறகுகள் உடைய கருடன்.

(151 - 176) இப்படிப்பட்ட கருடனைக் கொடியிலே உடைய செல்வன் திருமாலும், வலப்பக்கம் வெள்ளைக் காளைக் கொடியும், இடப்பக்கம் உமாதேவியாரும் மகிழ்ந்து வீற்றிருக்கும். முப்புரம் எரித்த - இமையா - முக் கண்ணுடைய முழுமுதல் கடவுளாகிய வலிமைமிகு சிவனும் ஆயிரம் கண்ணுடைய, பலநூறு யாகங்கள் செய்ததன் பயனால் எவரும் வெல்ல முடியாத இந்திர பதவியைப் பெற்ற, நிலத்திலே வீழும் நீண்டபெரும் துதிக்கை உடைய ஐராவதம் என்னும் வெள்ளையானை மீதமர்ந்து வரும் தேவேந்திரனும், தாமரைத் தண்மலரில் உதித்த நான் முகனாகிய பிரம்மனும் ஆகிய நான்கு பெரும் தெய்வங் களும்; உலகம் முழுதையும் காப்பதைத் தொழிலாகக் கொண்ட திக்குபாலகர்கள் போற்றும் மும்மூர்த்தி களுக்கும் தலைவராக, இந்தப் பூவுலகில் தோன்றி, தாமரைச் செல்வனாகிய பிரம்மனின் புகழை மீட்டுக் கொணரவும், ஆதித்தர், உருத்திரர், வசுக்கள், மருத்துவர் என்னும் நான்கு வகையினரும் பிரிவிலும் தம்முள் மாறுபடாது; முப்பத்து மூவரும், பதினெண் கணத்தாராகிய தேவ கணங்களும்

Koviloor Digital Library

நட்சத்திரம் போன்ற தோற்றமும், கடலில் தோன்றும் புயல்போல் பாயும் விரைவும், காற்றோடு பரவும் தீப்போன்ற கடுமையும், இடிபோன்ற வலிவும் அழகும் உடையவர்களாகத் தாங்கள் இருக்க வேண்டி வழிபட, இவர்களுக்கு அருள; வான்வழி விரைந்து வந்து - அவர்கள் காணத் திருமகள் தேவானையுடன் திருஆவினன்குடியில் எழுந்தருளி அருள்புரியவும் செய்வான் முருகன். அதுவும் அல்லாது;

(177-189) ஆறுவகைச் சாத்திர விதிகளை மீறாது கடைப் பிடித்து, தாய் தந்தையைப் போற்றி வழிபட்டுக் குடிப்பிறப்பும் குலப் பெருமையும் குன்றாதபடி, நாற்பத்திஎட்டு ஆண்டுகள் இளமை நலம் காத்து, கல்வி கேள்வியில் சிறந்து, அறநூல் கூறும் முத்தீ வளர்த்து வணங்கும் - முப்புரி நூலணிந்த - அந்தணர்; இறைவழிபாடு செய்யும் சமயம் அறிந்து நீரில் மூழ்கி, உடுத்திய ஈர ஆடையை அதுவே தானாக உலரும்படி அணிந்து கொண்டு; உச்சிமேல் கைகூப்பி வணங்கியபடி; ''சரணவபவ'' என்னும் ஆறெழுத்து மந்திரத்தை நாவில் உச்சரித்தபடி, வாசமலர் தூவி வணங்குவர். இப்படி வணங்குபவர் உள்ளம் குளிர மனம் மகிழ்ந்து, திருஏரகம் என்னும் சுவாமி மலையில் முருகப் பெருமான் (சாமிநாதனாக) எழுந்தருளியும் இருப்பான். அதுவும் அல்லாமல்;

5. குன்றுதோறாடல்

(190 - 217) பச்சிலைக் கொடியிலே வாசமுள்ள சாதிக் காயை இடையிடையே வைத்துக் கட்டிய மாலை அணிந்த பூசாரி; அழகிய இறைகூடை போன்ற தக்கோலம் என்னும் வாசம் பொதிந்த - காட்டுமல்லியும் வெண்தாளிப் பூவும் இட்டுக் கட்டிய மாலை அணிந்திருப்பான். வாசமிகு சந்தனக் குழம்பையும் அவன் தன் வைரம் பாய்ந்த மார்பில் பூசியிருப்பான். கொலைத்தொழில் உடைய, வில்லேந்திய வேடுவர்கள் நீண்ட மூங்கில் குழாய்களில் சேர்த்து வைத்துள்ள முற்றிய தேனை, மலைச்சாரலில் உள்ள சிற்றூரில் வாழும் தங்கள் குடும்பத்தாருடன் உண்டு களித்துக்,

Koviloor Digital Library

குறிஞ்சிப்பறை கொட்டிக் குரவைக் கூத்தாடி மகிழ்வர். அங்குள்ள ஆழமான சுனைகளில் கைகளால் தொடுவதால் மலரும் - பூவும் தண்டும் வேறு வேறு மணம் வீசும் - வண்டுகள் மொய்க்கும் - மலர்களாலான மாலை சூடிய கூந்தலுடன், இலைமுடி உடைய கஞ்சாவையும் வாச இலை உடைய நறுமலர் களையும் செங்கடம்ப மரத்தின் வெள்ளைப் பூங்கொத்துக் களையும் இடைசுற்றி ஆடையாகக் கட்டிக் கொண்டும், வண்டுகள் தேனுண்ண வரும் அகன்ற இலை ஆடையை முத்துவடமணிந்த சிற்றிடை மகிழ உடுத்திக் கொண்டும், மயிலைப் பழிக்கும் சாயலும் அன்னம் போன்ற நடையும் உடைய பெண்களோடு கூடிவாழும் குறவர்கள் இருக்கும் குன்றுகள் தோறும் சிவந்த நிறமுடைய சிவப்பு ஆடை தரித்த, சிவந்த அடி உடைய அசோகமரத்தின் தளிரை அசையும் காதில் சூடிய, இடுப்பிலே கச்சையும் காலிலே வீரக்கழலும் அணிந்த, வெட்சி மாலை புனைந்த - குழலூதும், கொம்பு முழக்கும், இவை அல்லாமல் இன்னும் பல வாத்தியங்களையும் இசைக்கும், ஆட்டுக்கடாவை வாகனமாகக் கொண்ட, மயிலேறுகின்ற, சேவல் கொடி கொண்ட நீண்ட தோளும், அது நிறைய வளைகளும் அணிந்த; வீணை இசைபோலும் இனிய குரலுடைய, புள்ளிமான் போலும் அழகிய பெண்கள் உடன்வர, நிலந்தோய உடுத்திய தூய ஆடை இடையில் பொருத்த அருள் வழங்கும் அகன்ற திருக்கரங்களோடு குமரன் குன்றுதோறும் ஆடிமகிழ்தலும் செய்வான். அதோடுகூட,

பழமுதிர் சோலை

(218 - 227) சிறியதான தினை அரிசியைப் பூக்களோடு கலந்து, ஆடு பலியிட்டும், சேவல் கொடியைச் சிறப்பாக நாட்டி; ஊர்கள் எல்லாம் கொண்டாடும் சிறந்த திருவிழா நடக்கும் இடங்களிலும்; அடியார்கள் பாடும் துதி கேட்டு மகிழ்ந்து அவர்களுக்கு அருள் செய்யத் தோன்றும் இடங்களிலும்; கையில் வேலோடு பூசாரி சாமி வந்து ஆடும் இடங்களிலும்;

Koviloor Digital Library

காடுகளிலும், சோலைகளிலும், ஆற்றோரங் களிலும்; ஆற்றின் நடுவே அமைந்த அழகான திட்டுகளிலும், குளக்கரைகளிலும்; கோவில் அமைந்த வேறுபல இடங்களிலும்; நாற்சந்தியிலும், நகரின் நடுஇடங்களிலும், புது மலர் பூக்கும் கடம்பர நிழலிலும், ஊர்ப்பொது இடத்திலும்; அம்பலத்திலும், யானை கட்டும் தறி நிறுத்திய இடங்களிலும், கொண்டை உடைய சேவல்கொடி தாங்கிய செவ்வேள் முருகன் எழுந்தருளி இருப்பான்.

(228 - 240) இப்படி எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமானுக்கு நெய்யோடு சிறு வெண் கடுகைச் சேர்த்து நெற்றியிலே அப்பிக்கொண்டு, மந்திரங்களை உச்சரித்தபடி, நெஞ்சுக்கு நேராகப் பெருவிரலை நீட்டி, மற்ற நான்கு விரல்களையும் மடித்தபடி வைத்து ஆவாகனம் செய்கின்ற குறிப்பைக் காட்டி; அழகிய புதுமலர்களைத் தூவி, இரண்டு வேறு வேறான நிறமுடைய ஆடைகளை இடையிலே உடுத்திக் கொண்டும், கையிலே சிவப்பு நூலாலே காப்புக் கட்டிக் கொண்டும், வெண் பொரி தூவி, வலிமையும் தடித்த கால்களும் உடைய கொழுத்த கடாவின் குருதியோடு கலந்த - சுத்தமான வெள்ளை அரிசிச் சோற்றைச் சிறு பலியாக இட்டும், இன்னும் பலவகை உணவுகளைப் படைத்தும், வாசமிகு சந்தனத்தோடு மஞ்சள் நீர் தெளித்து; குளிர்ந்த பெரிய செவ்வலரிப் பூமாலையையும், இன்னுமுள்ள பல வாசமலர் மாலைகளையும், சரியான அளவு நறுக்கி அணிவித்து; குளிர்ந்த தங்கள் மலைப்பகுதி நலமாக வாழ வேண்டும் என்று வாழ்த்தி வேண்டிக் கொண்டு, வாசனைத் தூபங்கள் காட்டி, குறிஞ்சிப் பண்பாடிட, ஓடும் அருவி நீர் ஒலியோடு, இவர்கள் பாடும் பல இசை வாத்தியங்களும் சேர்ந்து இன்னிசை முழங்க;

(241 - 250) பல வண்ண வாச மலர்களைத் தூவி, பார்த்தாலே அச்சம் ஊட்டக் கூடிய சிவந்த தினை அரிசியைப் பரப்பி, குறப்பெண்கள் முருகனுக்குப் பிடித்தமான வாத்தி யங்கள் இசைக்கப், பகைவர் நடுங்க, முருகப் பெருமான் எழுந்தருள வழிசெய்து; பயபக்தி உண்டாக்கும் பெரிய

Koviloor Digital Library

கோவிலில் சாமி வந்தவர்கள் ஆடும் இடம் அதிரப், பாடியும் கொம்புகள் ஊதியும், மணி அடித்தும், வலிமை குன்றாத யானையை வாழ்த்தி வணங்கி, வேண்டினவர் வேண்டியதை எல்லாம் பெற்று மகிழ்ந்திட அருள்புரிய வேண்டும் என்று துதித்து வழிபடுவர். இப்படி அடியவர்கள் வழிபடும், அந்த அந்த இடங்களில் எல்லாம் இருந்து அன்பர்களுக்கு ஆறுமுகன் அருள் புரிவான்.

(251 - 265) இப்படிச் சொல்லப்பட்ட, மேலே குறித்த இடங்களில் அல்லாது, முருகப் பெருமானை நீ வேறு எங்காகிலும் காண நேர்ந்தால், அவரை முகம் மலர நோக்கி, கைகூப்பி வணங்கித் திருவடிகளில் விழுந்து பணிவாயாக.

பணியும்போதே;

நீண்டுயர்ந்த இமயமலையில், கருங்குவளை மலர் பூக்கும் சரவணப் பொய்கையிலே; ஐம்பெரும் பூதங்களில் ஒருவனான அக்கினி தேவன்; சிவபெருமானின் ஐந்து முகத்தோடு ஆறாவதான அதோ முகத்தில் தோன்றிய ஓர் ஆறு நெருப்புப் பொறிகளை கைகளிலே ஏந்தி வந்துவிட, அவற்றைக் கார்த்திகைப் பெண்கள் அறுவர் ஏற்க, ஆறுமுகக் கடவுளாக அவதரித்து ஆறுடலும் ஓர் உடலாக ஆறுமுகப் பெருமானான அண்ணலே; சனகாதி முனிவர் நால்வருக்கும் ஞானம் உபதேசிக்கக் கல்லால மரநிழலில் வீற்றிருக்கும் மகேசன் மகனே; பெரிய மூங்கில்கள் வளரும் மலைக்கு அரசி உலக அம்மை பெற்ற செல்வனே; பகைவர்க்கு எமனே, வீரப்போரில் வெற்றி அருளும், கொற்றவை புதல்வனே, அணிமணிகள் பூண்ட காளியின் மைந்தனே, வானவர் வணங்கும் வளைந்த வில்லேந்திய தானைத் தலைவனே - தேவ சேனாதிபதியே; செபமாலை புரளும் மார்புடைய திருக்குமரா; வேதநூல் முற்றுணர்ந்த - ஓம் என்னும் பிரணவப் பொருள் உரைத்த - ஞானமூர்த்தியே, போரில் வல்லவனே - வீரம் மிக்கவனே; உள்ளத்தால் உயர்ந்த உத்தமர்களுக்கு உதவும் அருட்செல்வம்

Koviloor Digital Library

ஆனவனே, புலவர் பாடும் புகழ்மாலை கொண்டவனே, வள்ளி, தெய்வ யானை மணாளா; வீரர் தலைவனே, வெற்றிவேல் ஏந்திய வேலாயுதப் பெருமானே!

(266 - 292) கிரவுஞ்ச மலை பிளந்து, சூரனைக் கொன்ற சூரசம்காரனே; வானுயர உயர்ந்த மலைகளுக்கெல்லாம் உரியவனே, குன்று தோறாடும் குமரனே; பல சாதி சமயத் தவர்களும் பணிந்தேத்தும் பன்னிருகைப் பெருமானே, எல்லை யற்ற புகழுக்கும், போற்றிகளுக்கும் உரிய பரம் பொருளே; முருகப் பெருமானே, விரும்பி வேண்டுபவர் களுக்கு வேண்டி யதைத் தந்தருளும் வேலவனே, துன்பப்படுபவர்கள் துயர் துடைக்கத் துள்ளிவரும் வள்ளலே; போரில் வென்ற புகழ்மார்பில் பொன்னணி - பூமாலை விளங்கப் பொலிபவனே; பாடிப் பரிசில் பெற வரு வோர்க்குப் பலவளமும் சுகமும் பாரிக்க அருள்பவனே; பெருமைக்குரிய பெரியோர்கள் எல்லாம் போற்றி வணங்குகிற - காத்துலகை இயக்குகின்ற - கடவுளே; சூரர் குலம் வேரறுத்த சுப்பிரமணியத் தெய்வமே! ஒப்பற்ற பெருமைக் குரியவனே! ஒரு திருமுருகா - என்று நீ அறிந்த வகையில் எல்லாம் போற்றிப் பரவி முருகா, குகா, கந்தா நீயே சரணம் என்று, உன்னடியே தஞ்சம் என்று உன் இடம் நாடி வந்துள்ளேன். ஒப்புவமை இல்லாத உயர்பொருள் நீ அல்லவா? உனனைப் போல அருள யாருள்ளார் உலகில்? என்றெல்லாம் அவன் புகழைப் பாடிப் பரவுவாயாக. அப்படி நீ பாடிப் பரவிப் பணிந்த உடன்; பல்வேறு உருவமுடைய பூதகணங்கள், விழா நடக்கும் அந்த இடங்களில், மிகுந்த சக்தியோடு தோன்றி, முருகப் பெருமானிடம், பெருமானே, இதோ இங்கே வந்து நின்னைப் பல படப் போற்றிப் பணியும் இந்தக் கற்றறி புலவன், இரங்கத் தக்கவன் - அருளப்பட வேண்டியவன். எனவே அவனுக்கு விரும்பி அருளுக எனக் கூறும். இதைக்கேட்ட கந்தப் பெருமானும், விண்ணும் மண்ணும் அளக்க காண்பவர் மருள எடுத்த தோற்றத்தைச் சுருக்கிக் கொண்டு, கண்டவர் மகிழ்ந்து போற்றும் அழகிய வடிவோடும், புன்முறுவல் பூத்த முகத்தோடும்

Koviloor Digital Library

உன் முன் தோன்றி "மகனே மனக்கவலையை விடு, நீ என்னிடம் நாடி வந்ததன் நோக்கம் தான் அறிவேன்" என்று இன்மொழி கூறி உனக்குத் தன் தண்ணருளைப் பொழிவான். பிறகு உனக்கு என்ன குறை? நீ இறவாப் பெரும்பேறு அடைவாய்.

(293 - 295) கருநீலக் கடல் சூழ்ந்த இவ்வுலகில் நீ ஒப்பற்ற பெரும்புகழ் உடையவனாகத் திகழ உனக்கு உயர்ந்த பரிசுகளை எல்லாம்; பழமுதிர்ச் சோலை என்னும் மலைக்கு உரியவனான கந்தப் பெருமான் அருளுவான். பழமுதிர் சோலை மலை என்ன சாதாரணமானதா? இல்லை! ஓசை நயத்தோடு விழுகின்ற அருவிகள் பல நிறைந்தது. விழுகிற அருவிகள் வெறும் நீரை மட்டுமா கொண்டு வந்து கொட்டுகின்றன? இல்லை!

(296 - 317) கொடிபோல் அசைந்தாடி, வெள்ளைத் துணி விரித்தது போல் விழுகிற அந்த அருவிகள்; வருகிற வழியில் உள்ள அகில் கட்டைகளை சுமந்து கொண்டும், சந்தன மரங்களை வேரோடு சாய்த்துக் கொண்டும், பூத்திருக்கும் மூங்கில் மரத்தின் பூவும் கிளையும் தனியாக அவற்றை அடியோடு பெயர்த்துக் கொண்டும், சூரியனைத் தொட - வானம் முட்ட - வளர்ந்தது போல் இருக்கும் மலை உச்சியில் உள்ள தேனடைகள் சிதறித் தேன் வழியவும்; அவை முற்றிய பலா மரத்தின் சுளைகளோடு கலந்து விழவும், மலையில் மிக உயரத்தில் பூத்திருக்கும் சுரபுன்னை மலர்கள் உதிரவும், பெண் கருங்குரங்கும், கரியமுகம் உடைய ஆணகுரங்கும் அஞ்சவும், புள்ளிகள் உள்ள மத்தகத்தை உடைய பெண் யானைகள் குளிரால் நடுங்க, ஆண் யானை தந்தங்களைத் தாங்கியபடித் தத்திக் குதித்துப்; பொன்நிறம் விளங்க, பொன் துகள்களைத் தெளித்துக் கரையில் ஒதுக்கியும், வாழை மரத்தை மேல் கீழாகப் புரட்டியும், தென்னை மரத்தின் இளநீர்க் குலை சிதறி விழப் பாய்ந்தும், மலைச் சாரலில் விளைந்திருக்கும் மிளகுக் கொடிகள் கருநிறப் பூங்கொத்தோடு சாயவும், புள்ளிக் கலாபம் உடைய, அழகு நடை பயிலும் தோகை மயில்களும் வலிய காட்டுக் கோழிகளும் அஞ்சி ஓடவும்; ஆன் பன்றியும், இரும்பு

Koviloor Digital Library

போலும் வலிவுடைய வைரம் பாய்ந்த பனைமரச் சிறாய் போல நீண்டிருக்கும் - குச்சி போன்ற குட்டை உரோமமும், வளைந்த கால்களும் உடைய கரடிகளும் - பெரிய கற்பாறைகளுக்கு இடையே ஏற்பட்ட பிளவுகளில் உண்டான குகைளில் சென்று பதுங்கவும்; கரிய பெரிய கொம்புகளுடைய காட்டுப் பசுவும், காளையும் மலை உச்சியிலே நின்று அலறவும்; இழுமென் ஓசையொடு, அருவிகள் பாய்ந்து விழும் பழமுதிர் சோலைக்கு உரியன் - குன்றுதோறாடும் குமரன், குகன், வேலன், கந்தன், முருகன், சண்முகன்.

சரணம் சரணம் முருகா சரணம்

Koviloor Digital Library

அரும்பதவுரை

அகவ - அழைக்க
அடி - பாதம்
அடு - கொல்லு
அடுக்கம் - மலைப்பக்கம்
அட்டி - இட்டு
அந்தரம் - வானம்
அமை - மூங்கில்
அயர - நடத்த
அரமகளிர்- தெய்வப் பெண்கள்
அரி - வண்டு
அலர் - மலரும்
அலந்தார் - துன்பப்பட்டவர்
அலமரும் -துன்பப்படும்
அலைக்கும் - வருத்தும்
அல்குல் - மறைவிடம்
அவிர் - விளங்கும்
அவுணர் - தேவர்
அளியன் - இரங்கத்தக்கவன்
அளை - பொந்து
அறிவல் - அறிவேன்
ஆகம் - மார்பு
ஆசினி - பலா
ஆமா - காட்டுப்பசு
ஆய்ந்த - சிக்கெடுத்த
ஆரம் - சந்தனமரம்
ஆழ் - அழுத்திய
ஆறாக - வழியாக
ஆறினில் - ஒழுக்கத்தில்

இகல் - பகை
இடுபு - இட்டு
இடும்பை - துன்பம்
இணர் - பூங்கொத்து
இமைக்கும் - விளங்கும்
இயம் - வாத்தியம்
இயவுள் - கடவுள்
இரட்ட - ஒலிக்க
இரு - கரிய
இருபிறப்பாளர் - அந்தணர்
இழிதரும் - விழும்
இழை - நகை
இறால் - தேன்கூடு
ஈர் - குளிர்ந்த
உகிர் - நகம்
உக்கம் - இடுப்பு
உட்க - அஞ்ச
உரு - இடி
உருள் - தேர்ச்சக்கரம்
உரு - நிறம்
உரிஞ்சிய - உரைத்த
உரிவை - தோலாடை
உவறிய - உலர்ந்த
உளர - வாசிக்க
உளியம் - கரடி
உள்ளி - விரும்பி
உற - பொருந்த
உறழ் - போன்ற

Koviloor Digital Library

உறுநர் - அன்பர்
உறை - நீர்த்துளி
ஊகம் - கருங்குரங்கு
ஊழி - யுக
எயில் - கோட்டை
எய்யா - அடைய முடியாத
எருத்தம் - பிடரி
எல் - சூரியன்
ஏமுற - இன்பம் உண்டாக
ஏமுறும் - பாதுகாப்பான
ஏரகம் - சுவாமிமலை
ஏர்பு - எழுந்து
ஏறு - சிங்கம்
ஐ - வியப்பான
ஐது - மந்திரம்
ஐயவி - வெண்கடுக
ஒளி - வெள்ளை
ஓஅற - தங்குதல் இன்றி
ஓடா - கெடாத
ஓடை - நெற்றிப்பட்டம்
ஓதி - கூந்தல்
ஓர்க்கும் - செலுத்தும்
கடு - நஞ்சு
கணம் - கூட்டம்
கணவீரம் - செவ்வலரி
கதுப்பு - தலைமயிர்
கந்து - கட்டுத்தரி
கமம் - நிறைவு
கலிங்கம் - உடை
கவைஇ - சூழ்ந்து
கழி - மிகுதி
கறங்கு - காற்றாடி
கறி - மிளகு
கறுவு - கோபம்
காண்வர - அழகாக
காமர் - அழகிய
கால் - காம்பு
கால் - காற்று
கால்கோள் - கடல்
காழ் - வடம் - வைரம்
காழகம் - உடை
கானம் - காடு
குட - மேற்கு
குடா - வளைந்த
குடந்தம் - கைகூப்புதல்
குண்டு - ஆழம்
குல்லை - கஞ்சா
குழவி - குழந்தை
குளவி - காட்டுமல்லி
குறங்கு - தொடை
குறுடு - சந்தனக்கட்டை
குறும் - சிறிய
குன்றம் - கிரவுஞ்மலை
கூதாளம் - வெண்கடுகு
கூளியதர் - பூதங்கள்
கெழு - பொருந்திய
கொட்ப - பொருந்திய
கொழு - அழகிய
கொழுவிடை - கொழுத்த கடா
கொற்றம் - வெற்றி
கொன்ற - அழித்த
கேழல் - பன்றி
கோட்டன் - கொம்பூதுபவன்
கோபம் - இந்திரகோபம்
சகடம் - வண்டிச்சக்கரம்
சதுக்கம் - நாற்சந்தி
சந்தி - முச்சந்தி
சால்பெரும் - மிகப்பெரிய
சாறு - திருவிழா
சிமையம் - இமயமலை
சிலம்பகம் - மலைப்பக்க
சிலைப்ப - கதற


Koviloor Digital Library

சீரை - மரஉரி
சூர் - அச்சம் தரும்
சூல் - கரு
கெச்சை - வெட்சி
செம்பொறி - உத்தம ரேகை
செயலை - அசோகு
செயிர் - குற்றம்
செல் - இடி
செரு - போர்
செறுநர் - பகைவர்
செற்றம் - சினம்
சேண் - தூரம்
ஞாண் - கயிறு
ஞாயிறு - சூரியன்
ஞாலம் - பூமி
குரல் - ஒலிக்க
தணந்த - நீங்கிய
தலைஇய - பெய்த
தலைப்பெயல் - முதல் மழை
தறீஇ - தழுவி
தாவு - வருத்தம்
தாவுஇல் - குறையாத
தார் - மாலை
திணி - வலிமை
திவவு - கட்டு
திரு - இலக்குமி
திரோதித்து - மறைத்து
துஞ்சி - தங்கி
துமிய - சாய
துயல்வரும் - அசையும்
துவர - முற்ற
துனி - வெறுப்பு
தூ - தூய
தூங்க - அசைய
தூம்பு - துளை
தேய்த்த - அழித்த

தெய்வை - குழம்பை
தேறல் - தெளிவு
தைஇய - பொருந்திய
தொண்டகம் - குறிஞ்சிப் பறை
நசை - விருப்பம்'
நளி - குளிர்ந்த
நாவலம்பொன் - சம்பூதம்
நாறக்காய் - சாதிக்காய்
நாற்றி - தொங்கவிட்டு
நியமம் - கடைத்தெரு
நிவந்த- உயர்ந்த
நிவப்பு - உயிர்ப்பு
நுசுப்பு - இடை
நுதி - முனை
நுவல - துதிக்க
பகவில் - பிரித்த இடத்து
பட - தோன்ற
பயந்த - பெற்ற
பயில் - அடர்ந்த
பராரை - பருத்த அடி
பருமம் - பதினெட்டு வட்டம்
பல்லியம் - பல வாத்தியங்கள்
பார் - பாறை
பிணர் - பெரிய:
பிணிமுகம் - யானை
பிண்டி - அசோகு
பிணையல் - மாலை
பிரப்பு - குருணி
பிறழ் - வரிசையற்ற
புகர் - குற்றம்
புரி - செய்யும்
புரையுநர் - சமமானவர்
புலம் - அறிவு
புலரா - உலராத
புள் - கருடன்
புன்சாய் - சிறுகுச்சி

Koviloor Digital Library

பூட்கை - வலிமை
பேழ் - பெரிய
பொது - பொது இடம்
பொதுளி - தழைத்த
பொட்டில் - கூடு
பொருநர் - பகைவர்
பொலம் - பொன்
பொற்ப - பொலிய
போழ் - பிளக்க
மகரம் - சுறாமீன்
மஞ்ஞை - மயில்
மதன் - அறியாமை
மதவலி - மிக்க வலிமை
மடல் - பெரிய
மடவரல் - பெண்
மண்டி - நெருங்கிய
மண்ணுறுத்தி - அலங்கரித்து
மராஅத்த - மராமரத்தில்
மரபுளி - முறைப்படி
மருப்பு - கொம்பு
மள்ள -இளைஞர்
மறி - ஆடு
மறு - குற்றம்
மறுகு - தெரு
மாத்தாள் - பெரியகால்
முகிழ் - அரும்பு
முகை - மொட்டு
முசுக்கலை - ஆண் குரங்கு
முச்சி - கொண்டை
முடை - புலால் நாற்றம்
முரணியர் - மாறுபடுபவர்
முருக்கி - அழித்து
முழவு - மத்தளம்
முறி - தளிர்
முன்னி - விரும்பி
மூசா - ஊதாத
மேவர - பொருந்த
மொய்ம்பு - வலிமை
மோட்டு - வயிறு
யாக்கை - உடம்பு
யாத்து - கட்டி
யாறு - ஆறு
வகிந்து - பிளந்து
வடு - தழும்பு
வயிர் - ஊதுக்கொம்பு
வரி - புள்ளி
வரை - மூங்கில்
வலவையின் - வலப்பக்கம்
வழாஅது - தவறாது
வளி - காற்ற
வளை - சங்கு
வால் - வெள்ளை
விடர் - பிளவு
விளிவு - சாவு
விரை - வாசம்
விழு - பெருமழை
வெற்பு - மலை
வேரல் - மூங்கில்
வை - கூரிய
வைப்பு - இடம்



Koviloor Digital Library

Koviloor Digital Library

நக்கீரர்

தமிழ்ப் புலவர் நக்கீரர் கடைச்சங்க காலத்தவர். மதுரைக் கணக்காயர் மகன் நக்கீரன் எனப் புகழப்படும் இவர், கபிலர், பரணர் இவர்களோடு வைத்து எண்ணத்தகும் சிறப்புக்குரியர். அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகையில் இவர் பாடல்கள் உள்ளன என்றாலும் இவரின் திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியச் சால்பும் செந்தமிழ்ச் செழுமையும் நிறையக் கொண்டது. தருமியின் பாடலில் பிழை கண்டு கூறியபோது, இதைச் சரியென்று வாதிடவந்த முக்கட் பரம்பொருளிடமே; நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று வாதிட்ட வாக்கின் மன்னர், வாய்மையாளர், செம்மாந்த தமிழ்ப் புலமைக்குச் சரியான சான்று என்பதற்கு எடுத்துக்காட்டாக இலங்குபவர் நக்கீரர். இவரின் திருமுருகாற்றுப்படை தரும் பக்திச் சுவை-தமிழ்ப் பழக்குலை.

